**IN THE COURT OF ADDITIONAL CHIEF JUDICIAL MAGISTRATE, KUMBAKONAM**

| | | |
|---|---|---|
| **MCOP No. 159/2020** | **நாள் – 23.01.2026** | **சாட்சி – ம.சா.1** |

*Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969).*

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி.நித்யா | கணவர் பெயர் | திரு.முருகானந்தம் |

**2ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

விபத்து குறித்து நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் சென்ற காரும், எதிரே வந்த வாகனமும் ஒன்றுக்கொன்று நேரே மோதிக்கொண்டன என்றால் சரிதான். நான் தாக்க்ல செய்துள்ள மனுவில் நான் சென்ற காரின் ஓட்டுனர் மீது தவறு இல்லை என்றும், எதிரே வந்த வாகனத்தின் ஓட்டுனர் மீது தவறு என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் சென்ற வாகனத்தின் உரிமையாளரான 3ஆம் எதிர்மனுதாரருக்கு எதிராக 1ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் பொய்யாக புகார் கொடுக்கப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதாக நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ம.சா.ஆ.5 காயச்சான்றில் எனக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தலையில் எலும்பு முறிவு எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ. 6 மருத்துவ விடுவிப்பு சான்றில் இடது காலில் எலும்பு முறிவு எதுவும் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், எனக்கு அடிப்பட்ட பகுதிகளில் சிராய்ப்பு காயங்கள் தான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அன்பு மருத்துவமனையில் 22.05.2019ல் அனுமதிக்கப்பட்டு 23.05.2019ல் விடுவிக்கப்பட்டேன்

என்றால் சரிதான். அன்பு மருத்துவமனையில் வழங்கப்பட்ட ம.சா.ஆ.8 மருத்துவ மருந்து சீட்டுகளில் எனது பெயரோ, மருத்துவர் பெயரோ குறிப்பிடப்படவில்லை என்றாலும், மருத்துவமனையின் முத்திரை இல்லை என்றாலும் சரிதான். ம.சா.ஆ. 11 ரசீதில் எனது பெயரும், மருத்துவர் பெயரும் குறிப்பிடப்பட்டு தொகை செலுத்தப்பட்டது என்று முத்திரை சீல் வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மருத்துவமனையில் ஸ்கேன் எடுக்கும் போது ஸ்கேன் அறிக்கை வழங்கப்படும் என்றால் சரிதான். மேற்கண்ட ஸ்கேன் அறிக்கையை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.7 மருந்து சீட்டில் பிரவீன்குமார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது யார் என்றால் எனது மகன் பெயர் ஆகும். மேற்கண்ட மருந்து சீட்டு எனக்கு சம்பந்தம் இல்லாதது என்றால் எனது மகன் உடன் வந்ததால் பெயர் கேட்ட போது எனது மகன் தனது பெயரை சொல்லிவிட்டார். 2019 தேதியிட்ட மருந்து ரசீது சீட்டுகள் வழக்கில் தாக்கல் செய்துள்ளதை தவிர வேறு எதுவும் இல்லை என்றால் சரிதான். ம.சா.ஆ. 17, 18 ஆவணங்கள் வழக்கிற்காக நஷ்ட ஈடு பெறவேண்டும் என்பதற்காக மருத்துவமனையில் இருந்து பெற்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.10 ஸ்கேன் அறிக்கை விபத்து நடந்த சமயத்தில் அன்பு மருத்துவமனையில் எடுக்கப்பட்டது என்றால் சரிதான். ம.சா.ஆ. 17, 18 ரசீதுகளுக்குரிய அறிக்கை மற்றும் ஸ்கேன் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் பத்தி 6ல் குறிப்பிட்டுள்ளவாறு ஊனங்களோ, உபாதைகளோ எனக்கு இல்லை என்றால் சரியல்ல. நான் கடை வைத்து தையல் தொழில் செய்ததற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றாலும், அவ்வாறு தையல் தொழில் செய்ததற்கான ஆவணங்களை தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.16 தையல் பயிற்சிக்கான மூன்று மாத படிப்பு மட்டுமே என்றால் சரிதான். அதற்கு மேல் பயிற்சி எடுத்தற்கான எவ்வித சான்றும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ–16 ஆவணமானது மகளிர் நல மேம்பாட்டு திட்டத்தின் கீழ் நான் பயிற்சி பெற்றதற்கான ஆவணம் மட்டுமே என்றால் சரியல்ல. எனக்கு வருமான இழப்பு ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எனது கணவர் தனியாக வருமானம் ஈட்டி வருகிறார் என்றால் சரியல்ல. மனுவிற்காக நான் மட்டுமே குடும்பத்தில் வருமானம் ஈட்டி வருவதாக தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு தொகை மிக அதிகம் என்றால் சரியல்ல.

*Typed to my dictation in open Court, read over to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.*

G. MANIKANDARAJA

Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2026.01.23 17:18:38 +0530

*Additional Chief Judicial Magistrate,*
Kumbakonam.